# இந்தியா-ரஷ்யா இடையிலான ஆணைக்குழுவின் 22 வது அமர்வு

**செப்டம்பர் 12, 2016**

வர்த்தகம், பொருளாதாரம், அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் கலாச்சார ஒத்துழைப்பு ஆகியவை மீதான (IRIGC-டி.இ.சி) இந்தியா-ரஷ்யா அரசுகளுக்கு இடையிலான ஆணைக்குழுவின் 22 வது அமர்வு செப்டம்பர் 13, 2016 அன்று புது தில்லியில் நடைபெற உள்ளது. திருமதி. சுஷ்மா சுவராஜ், வெளிவிவகார அமைச்சர் இந்திய தூதுக்குழுவை வழிஎடுத்து செல்ல உள்ளார்; மதிப்பிற்குரிய திரு டிமிட்ரி ஒல்கொவிச் ரொகோஸின், ரஷியன் கூட்டமைப்பு அரசு பிரதித் தலைவர் ரஷியன் குழுவிற்கு தலைமை தாங்க உள்ளார். இந்த ஆணைக்குழுவின் கடந்த கூட்டம் அக்டோபர் 2015 ல் மாஸ்கோவில் நடைபெற்றது.

வர்த்தகம், பொருளாதாரம், அறிவியல், கல்வி மற்றும் கலாச்சார ஒத்துழைப்பு உள்ளடக்கிய இருதரப்பு விவகாரங்களை பற்றி ஒரு பரந்த அளவிலாக ஆய்வு செய்வதற்கு அரசாங்கங்களுக்கு இடையிலான இந்த ஆணையம் ஒரு கட்டமைப்பை அளிக்கிறது.

இந்தியா மற்றும் ரஷ்யா ஒரு சிறப்பான மற்றும் மிக்க மூலோபாய கூட்டுறவை பகிர்ந்து வருகிறது. எதிர்வரும் கூட்டத்தின் போது, வெளிவிவகார அமைச்சர் மற்றும் பிரதி தலைவர் ரொகோஸின் IRIGC-டி.இ.சி பொறிமுறையை கீழ் பல்வேறு குழுக்கள் மற்றும் உப அமைப்புகளின் வேலையை மீளாய்வு செய்வதுடன் மற்றும் அக்டோபர் 2016 இல் மாண்புமிகு திரு விளாடிமிர் புட்டின், ரஷியன் கூட்டமைப்பு தலைவர் அவர்களின் எதிர்வரும் இந்தியா விஜயம் பற்றி விவாதிக்க உள்ளனர்.

**புது தில்லி**

**செப்டம்பர் 12, 2016**